# முதல் இடைப் பருவத்தேர்வு – 2022

12 - ஆம் வகுப்பு

## விலங்கியல்

காலம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 35

### பகுதி - I

**கொடுக்கப்பட்டுள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 1 X 10 = 10

1. எவ்வகை கன்னி இனப்பெருக்கத்தில் ஆண் உயிரிகள் மட்டுமே உருவாகின்றன?

   அ) அர்ரினோடோக்கி ஆ) தெலிடோக்கி இ) ஆம்ஃபிடோக்கி ஈ) அ மற்றும் ஆ

2. எவ்வகை இனப்பெருக்கத்தில் வேறுபாடுகள் தோன்றும்?

   அ) பாலிலி இனப்பெருக்கம் ஆ) கன்னி இனப்பெருக்கம்

   இ) பால் இனப்பெருக்கம் ஈ) அ மற்றும் ஆ

3. சாதகமற்ற சூழ்நிலையில் உறையாக்கம் காணப்படும் உயிரி ............................ .

   அ) வோர்டிசெல்லா ஆ) யூக்ளினா இ) பாரமீசியம் ஈ) அமீபா

4. கரு பதியும் இடம் .................. .

   அ) கருப்பை ஆ) வயிற்றுக்குழி இ) கலவிக்கால்வாய் ஈ) ஃபெல்லோபியன் குழாய்

5. சீம்பாலில் அதிகம் காணப்படுவது

   அ) Ig E ஆ) Ig A இ) Ig D ஈ) Ig M

6. விந்து செல்லாக்கம் முழுவதுமாக நடக்க ................. நாட்கள் ஆகின்றது.

   அ) 30 ஆ) 28 இ) 46 ஈ) 64

7. ஆண்ட்ரோஜென் இணைவுப்புரதத்தின் வேலை

   அ) விந்துக்களை வெளித்தள்ளுதல் ஆ) ஸ்பெர்மியோஜெனீஸிஸ் செயல்

   இ) இன்ஹிபின் உற்பத்தியை தூண்டுதல் ஈ) FSH வெளியிடுவதை தடை செய்தல்

8. கீழ்வருவனவற்றுள் பாக்டீரிய பால்வினைநோய்க் குழுவை குறிப்பிடுக

   அ) கிரந்தி, வெட்டைநோய், கேன்டிடியாஸிஸ்

   ஆ) கிரந்தி, கிளாமிடியாஸிஸ், வெட்டைநோய்

   இ) கிரந்தி, கோனோரியா, டிரைக்கோமோனியாஸிஸ்

   ஈ) கிரந்தி, டிரைக்கோமோனியாஸிஸ், பெடிகுலோஸிஸ்

9. ஆண்களில் செயல்படுத்தப்படும், நிரந்தர கருத்தடைமுறை

   அ) குடல்வால் வீக்கம் ஆ) விந்து குழல் தடை

   இ) வாய்வழி கருத்தடை மாத்திரைகள் ஈ) கருக்குழல் தடை

10. இரவில் வியர்த்தல் எந்த நோயின் அறிகுறி

    அ) எய்ட்ஸ் ஆ) மேகப்புண் இ) கேன்டிடியாஸிஸ் ஈ) கிளாமிடியாஸிஸ்

## பகுதி - II

**எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளி.** 3 X 2 = 6

11. முதுமை நிலை என்றால் என்ன?

12. இன்ஹிபின் என்றால் என்ன?

13. பனிக்குட துளைப்பு என்பது யாது?

14. கோரியான் நுண்நீட்சி ஆய்வு பற்றி குறிப்பு வரைக.

15. விந்து திரவத்தில் அடங்கியுள்ள பொருள்கள் யாவை?

## பகுதி - III

**எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளி.**

**வினா எண் 20 க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்** 3 X 3 = 9

16. இழப்பு மீட்டல் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

17. கருக்கொலை, சிசுக்கொலை - வேறுபடுத்துக.

18. விந்து செல்லின் படம் வரைந்து பாகங்களை குறி.

19. இடம் மாறிய கர்ப்பம் என்றால் என்ன? அதன் விளைவுகளை குறிப்பிடுக.

20. ஒரு ஆண் தேனீ 16 குரோமோசோம்களையும் அதே சமயம் ஒரு பெண் தேனீ 32 குரோமோ சோம்களையும் கொண்டிருக்கின்றன. இதற்கு காரணம் தருக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 2 X 5 = 10

21. கன்னி இனப்பெருக்கம் என்றால் என்ன? அதன் வகைகளை விவரி.

*(அல்லது)*

கருவுறுதல் மற்றும் கருப்பதித்தலை படத்துடன் விவரி.

22. மாதவிடாய் சுழற்சியின் பல்வேறு நிலைகளை விவரி.

*(அல்லது)*

வைரஸ்களால் ஏற்படும் பால்வினை நோய்கள், காரணிகள் மற்றும் அறிகுறிகளை அட்டவணைப்படுத்துக.